தலைப்பு 248 - மதுவரித் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 248 - மதுவரித் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மதுவரித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து மதுவரி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்ததமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையயை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க மதுவரித் திணைக்களத்தினால் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது மதுவரித்

திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் இல ங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட:டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் ரோகவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு

அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 மதுபான ஏற்றுமதி மீதான மதுவரிப் பணத்தை விலக்களித்தல்

மதுவரித் திணைக்களத்திற்குரிய மதுபான ஏற்றுமதி மீதான மதுவரிப் பணத்தை கணக்கீடு செய்தலினை பரீட்சித்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	2024 ஆம் ஆண்டு தொடர்பாக உற்பத்திசாலையினால் உள்நாட்டில் தயாரிக்கின்ற மதுபானங்களின் ஏற்றுமதி மீதான வரி விலக்குப் பெறுமதியை உரிய உற்பத்தி வரிகளிலிருந்து கழித்து தேறிய மதுவரி வருமானம் மாத்திரம் மதுவரித் திணைக்களத்தினால் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க மதுவரி திணைக்களத்தின் மீளாய்வாண்டிற்கான	நிதி, பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது வருமானத்திலிருந்து மீளச் செலுத்துவதற்கு அல்லது செலவுத் தலைப்பிலிருந்து செலுத்தும் போது காணப்படுகின்ற சிக்கலின் காரணமாக தற்பொழுது இருக்கும் நடைமுறையை பின்பற்றுவதற்கும் நிதிக்கூற்றுக்களில் வருமானக்	அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க வருமானங்கள் கணக்குவைக்கப்படுதல் வேண்டும்.

மதுபானம் மீதான வரி வருமானம் ரூபா 12,194,197,179 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கணக்கின் மூலம் வரி விலக்கல் பெறுமதியை ஒரு குறிப்பின் மூலம் வெளிப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.	
(ii) ஏற்றுமதி செய்கின்ற வருமானங்களுக்குரிய வரிப் பணத்தை மீளச் செலுத்துதலினை கணக்கு வைப்பதற்காக மதுவரி திணைக்கத்திற்கு பொருத்தமான ஒரு செலவு விடயமும் (Vote) தேவையான நீதி எற்பாடும் மற்றும் அந்த செலவு விடயத்தின் மூலம் உரிய மதுவரி விலக்கல் பணத்தை கணக்கீடு செய்வதற்கு தேவையான அங்கீகாரமும் வழங்கப்படாமையின் அடிப்படையில் மதுவரித் திணைக்களத்தின் மீளாய்வாண்டிற்கான முழுச் செலவு ரூபா 12,194,197,179 ஆல் குறைத்து கணக்கீடு செயயப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கி கொள்கிறேன். இலங்கை மதுவரி திணைக்கத்தின் நிதி கட்டுப்பாட்டிற்குள் நிறைவேற்ற முடியாததன் காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளது.	அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் மற்றும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க செலவுகள் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

1.6.2 மூலதனச் செலவுகளை

நிதிக் கூறறுக்களுக்கு உரிய மூலதனச் செலவுகளை கணக்குவைப்பதனை பரீட்சிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மதுவரி பரிசு நிதியத்தின் ஒரு சொத்தாகிய பனாதரகம மதுவரி பயிற்சிக் கல்லூரியின் ஒரு கட்டிடத்தினை திருத்தம் செய்வதற்காக ரூபா 2,010,657 தொகை குருனாகல் மாவட்ட செயலகத்தினால் செலவு செய்யப்பட்டிருந்துடன் அது மதுவரித் திணைக்களத்தின் 2001 கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் போது மதுவரி பரிசு நிதியத்திலிருந்து உரிய பெறுமதியை நீக்கி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கப்பட்டது.	சரியான செலவு விடயத்தின் மீது கணக்கு வைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.6.3 வைப்புக் கொடுப்பனவுகள்

நிதிக் கூற்றுக்களுக்கு உரிய வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் மீதிகளை கணக்குவைத்தலினை பரீட்சித்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கைத்தொழில் குற்ற அறிக்கைக்காக ஒட்டுமொத்த கட்டணத்தை அறவீடு செய்வதற்காக வைப்புச் செய்த ரூபா 5,285,845 மற்றும் ஏனைய வைப்புக்களுக்காக வைப்புச் செய்த ரூபா 203,500 ஆக மொத்தமாக ரூபா 5,489,345 வைப்பு மீதிகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்த்து முடிவடைந்திருந்தும் அந்த மீதிகள் இன்னும் வைப்புக் கணக்கு 6000-0-0-0-1-0-122-0 ஆம் இலக்க பிணைவைப்பு கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	தீர்த்து முடிவுறுத்தப்பட்ட கைத்தொழில் குற்ற அறிக்கைக்காக ஒட்டுமொத்த கட்டணத்தை அறவீடு செய்வதற்காக வைப்புச் செய்யப்பட்ட பணமும் ஏனைய வைப்புக்களுக்கான வைப்பு மீதிகளும் வைப்புக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு சரிசெய்வற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தருக்கு உரிய அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன.	2024 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்த்து முடிவுறுத்தப்பட்டுள்ள வைப்பு மீதிகளை வைப்புக் கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6.4 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்குவைப்பதனை பரீட்சித்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காணிகளின் பெறுமதி ரூபா 282,680,000 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	எதிரகாலத்தில் மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்று காணிகளின் பெறுமதியை சரிசெய்வதற்காக உரிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.	சொத்துக்களுக்கு சரியான மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்று அச்சொத்துகளினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 259,470,329 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்பட்டுள்ளது.	சொத்துக்களுக்காக சரியான மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்று அச்சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii)	2024 ஆம் ஆண்டில் மதுவரி பரிசு நிதியத்தின் கீழ் கொள்வனவு செய்த ரூபா 6,767,300 பெறுமதியான 25 "ஹைட்ரோ மீட்டர்கள்" மதுவரி திணைக்களத்தின் இயந்திரங்கள் மற்றும் உபகரண்களான ஆய்வுகூட உபகரணங்களின் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வரிசெய்து சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது.	மதுவரி பரிசு நிதியத்தின் கீழ் கொள்வனவு செய்த சொத்துக்களை மதுவரி திணைக்களத்தின் சொத்துக்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலைகளின் (WIP) பெறுமதி ரூபா 190,803,318 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்து சமர்ப்பிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	உண்மையாக காணப்படுகின்ற சொத்துக்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நிதிக் குத்தகை சொத்துக்களின் பெறுமதி ரூபா 153,111,371 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2024 நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களின் பெறுமதியாக 19 கெப் வாகனங்களின் கிரயம் ரூபா 129,527,358 தொகை, 19 கெப் வாகனங்களுக்காக செலுத்தப்பட்ட குத்தகை வட்டி ரூபா 106,283,921 தொகை மற்றும் 19 கெப் வாகனங்களுக்காக செலுத்தப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 2,358,280 தொகை ஆக மொத்தம் ரூபா 238,169,560 காட்டப்பட்டிருந்தது.	கெப் வாகனத்திற்காக செலுத்தப்பட்ட குத்தகை, வட்டிப் பணம், முத்திரைக்கட்டணம் என்பன கெப் வாகனங்களின் பெறுமதியிலிருந்து நீக்கி உள்ளபடியான கிரயம் மாத்திரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும்.
(vi)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ஒட்டி செயற்படுத்தப்படாத பாதுகாப்பு குறியீடுகளின் கிரயமான ரூபா 36,120,593 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	பதில் வழங்கப்படவில்லை.	அனைத்து சொத்துக்களையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் வடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டதாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனனால் மேற்கொள்ளப்பட்ட 1.6.1(அ)iv, 1.6.1(ஈ)iv, மற்றும் 2.1(ஈ)ii ஆகிய சிபாரிசகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிலுவையாக இருந்த வருமானம்

நிலுவையாக இருந்த வருமானம் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின போது கீழே குறிப்பிட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	மதுவரி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் நிலுவை வருமானம் ரூபா 24,442,751 குறைத்து காட்டப்பட்டிருந்தது.	ஒரு மதுபான உற்பத்தி நிறுவனத்தின் சேதமடைந்தமைக்கான பணம் ரூபா 24,442,751 நிதிக்கூற்றுக்களில் பதியப்படாமை இந்த வித்தியாசத்திற்கு காரணமாகும்.	நிதிக்கூற்றுக்களின் உரிய அனைத்து தகவல்களையும் சரியாக உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக 05 நிறுவனங்களிடமிருந்து நிலுவையான மதுவரி வருமானம் ரூபா 1,702,131,279 மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 4,635,465,422 ஆக மொத்தமாக ரூபா 6,337,596,701 தொகை அறவீடு செய்ய வேணடி இருந்தது.	• குளோப் பிளண்டர்ஸ் நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,171,003,827 தொகை நிதிக்கூற்றுக்களில் பதியப்படாமை இந்த வித்தியாசத்திற்கு காரணமாகும். • வயம்ப ஸ்பிரீட் இருப்பு களஞ்சியத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 289,408,594 தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. • வயம்ப டிஸ்டிலெரீஸ் நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 577,391,758	நிலுவை வருமானத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

தொகையை அறவீடு செய்வதற்காக CA (Writ) 649/2023 ஆம் இலக்க வழக்கு நீதிமன்றத்தில் கோவை செய்யப்பட்டுள்ளது என சட்டப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. அந்த வழக்கின் தீர்ப்புக்கு இணங்க மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- மெகலம் பிரேவரி நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 619,964,802 தொகையை அறவீடு செய்வதற்காக SP/SPL/LA/29/2020 ஆம் இலக்க வழக்கு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. அந்த வழக்கின் தீர்ப்புக்கு இணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

- டபிள்யு.எம்.மென்டிஸ் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,679,827,717 தொகையை அறவீடு செய்வதற்கு நட்ட நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

உத்தேச வருமான நிருவாக முறைமையை (RASED) ஸ்தாபிப்பது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மதுவரித் திணைக்களத்தின் உத்தேச வருமான நிருவாக முறைமயை (RASED) உருவாக்குவதற்காக பொதுத்	பதில் வழங்கப்படவில்லை.	பொதுத்திறைசேரியினால் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டிலிருந்து உரிய குறிக்கோள்களை

திறைசேரியினால் 2022-2024 காலத்தில் மொத்தமாக ரூபா 1,041,800,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரை எந்த பணத்தையும் பயன்படுத்தி மேற்கூறிய முறைமையை அபிவிருத்தி செய்வதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.		நிறைவேற்றுவதற்காக சரியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

சொத்துக்கள் முகாமைத்துவம் சம்பந்தமாக மேற்கொண்ட பரீட்சிப்பின போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை திணைக்களத்தினால் பிராந்திய அலுவலகங்கள் செயற்பட்டு வருகின்ற 15 காணிகளின் சட்ட ரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அறிக்கையினைப் பெற்று இலங்கை மதுவரித் திணைக்களத்தின் காணிப் பெறுமதியை சரிசெய்து கொள்வதற்காக உரிய விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கப்பட்டுள்ளது.	திணைக்களத்தின் காணிகளின் சட்டரீதியான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 நட்டங்களும் சேதங்களும்

4.3.1 மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் உதிரிப் பாகங்கள் காணாமல் போயுள்ளமை

மதுவரி திணைக்களத்தின் தலைமை அலுவலக வளவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் உதிரிப் பாகங்கள் காணாமல் போயுள்ளமை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
திணைக்களம் ஒரு பாதுகாப்பு சேவை கம்பனியின் சேவையை பெற்றுக்கொண்டிருந்தும் 2023 செப்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி அலுவலக வளவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த மின்பிறப்பாக்கி இயந்திரத்தின் பகுதிகள் காணாமல் போயிருந்தன. பின்னர் ரூபா 3,297,050 தொகையான சேவை	நிதிபிபிரமாணம் 104(1) இன் பிரகாரம் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சினால நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவினால விசாரணைகளை மேற்கொண்டு 2025-04-10 ஆந் திகதி முழுமையான விசாரணை	சொத்துக்களின் பாதுகாப்பிற்காக சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை ஸ்தாபித்து பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உடன்படிக்கையின் அடிப்படையில் மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை திருத்தம் செய்திருந்தும் கணக்காய்வு அறிக்கைத் திகதி வரை மின்பிறப்பாக்கி இயந்திரம் செயற்படும் நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. சம்பவம் தொடர்பாக முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிககை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பொது 284 மற்றும் பொது 285 படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	

4.3.2 மதுபான உற்பத்திச் சாலையில் ஏற்பட்ட தீயினால் பாதுகாப்பு குறியீடுகள் அழிவடைந்தமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
தங்கொடுவ பிரதேசத்தில் செயற்பட்டு வந்த மதுபான உற்பத்திச்சாலையில் 2024 மே 26 ஆந் திகதி தீ ஏற்பட்டு மதுபான போத்தல்களில் ஒட்டுகின்ற பாதுகாப்பு குறியீடுகளின் இருப்பு அழிவடைந்திருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. • 2024 ஆகஸ்ட் 12 ஆந் திகதி அரசாங்கத்தின் இரசாயன பகுப்பாய்வு அறிக்கைக்கு இணங்க இது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட தீப்பிடிப்பு என உறுதிப்படுத்தப்படல் • பாதுகாப்பு குறியீட்டு முகாமைத்துவ முறைமையின் பிரகாரம் தீப்பிடித்தல் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்டிருக்க வேண்டிய பாதுகாப்பு குறியீட்டின் அளவு 8,179,194 ஆக இருந்த போதிலும் மதுவரி உத்தியோகத்தர்களின் பொறுப்பில் 1,396,988 பாதுகாப்பு குறியீடுகளின் இருப்பு மாத்திரம் காணப்படுதலும் அவை அனைத்தும் தீப்பிடித்திருந்தமையும்	இலங்கை மதுவரி திணைக்களத்தின் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் 2024 திசெம்பர் 27 ஆந் திகதிய ED/05/02/General-1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் மூலம் புலனாய்வு செய்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. விநியோகச் சங்கிலியை ஒழுங்குபடுத்துதல் பிரிவினால் ஒவ்வொரு அளவில் மதுபானம் உற்பத்தி செய்பவர்களுக்கு இணங்க வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு குறியீட்டு இருப்புக்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய உச்ச அளவு வரிப் பணத்தை கணித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. விநியோகச் சங்கிலியை ஒழங்குபடுத்துதல் பிரிவினால் பாதுகாப்பு ஸ்டிக்கர்களை உற்பத்திச்சாலைக்கு வழங்கும் நடைமுறையின் போது	மேற்கூறிய அவதானிப்புக்கள் சம்பந்மாக முறையான புலனாய்வினை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளங்கண்டு சட்டரீதியாகவும் ஒழுக்காற்று ரீதியாகவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

• உரிய உற்பத்திச்சாலையின் உற்பத்தி இயலளவிற்கு இணங்க 8,179,194 பாதகாப்பு குறியடுகளின் இருப்பினை வழங்கியிருத்தல் வழமைக்கு மாற்றமான ஒரு நிலைமையாக அவதானிக்கப்பட்டது. • காணாமல் போயுள்ள பாதுகாப்பு குறியீடுகளை பயன்படுத்துவதன் மூலம் அறவிடக்கூடியதாக இருந்த ரூபா 4,117,520,819 வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தமை • தீப்பிடித்த சந்தர்ப்பத்தில் CCTV கமரா முறைமை செயற்படாது இருந்தமை மற்றும் உத்தரவாத மளிக்கப்பட்டள்ள தீ பாதுகாப்பு முறைமையின் மூலம் தீ கட்டுப்படுத்தப்படாமை மேற்கூறிய அவதானிப்புக்கள் சம்பந்தமாக முறையான புலனாய்வினை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளங்கண்டு சட்டரீதியாகவும் ஒழுக்காற்று ரீதியாகவும் நடவடிக்கை எடுப்பதற்கும் இழக்கப்பட்ட வரி வருமானத்தை அறவீடு செய்வதற்கும் திணைக்களம் தவறியிருந்தது	இருப்புக்கள் சம்பந்தமான கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்காக உரிய வேண்டுதல் மேற்கொள்ளப்பட்ட இருப்பிலிருந்து உரிய உற்பத்திச்சாலையின் நிலையப் பொறுப்பாளர் மதுவரி அத்தியட்சகர், உதவி மதுவரி ஆணையாயர் ஆகியோரினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அந்த இருப்பிலிருந்து வழங்குவதற்கு முகாமைத்துவ முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது உற்பத்திச் சாலைகளில் காண்படுகின்ற CCTV கமரா முறைமை தீ பாதுகாப்பு முறைமை, ஊழியர் நலன்புரி வசதிகள் என்பன தொடர்பாக தொடர்ச்சியாக தெரிவுப் பரீட்சிப்பிற்கு உட்படுத்துமாறு ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன.	

4.3.3 போலியான மதுபான போத்தல்கள் மற்றும் ஸ்பிரீட் இருப்புக்களை கைப்பற்றுதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
5,000 லீற்றர் எதனோல் ஸ்பிரீட்கள் மற்றும் 8,446 மதுபான போத்தல்கள், தங்கொடுவ பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வந்த மதுபான உற்பத்திச்சாலைக்குச் சொந்தமான 03 லொறிகளுக்குள் மறைத்து ஒரு தனியார் வளவில் இருக்கும் போது கைப்பற்றப்பட்டமை சம்பந்தமாக விசாரணைக் குழு	குறித்த விடயம் சம்பந்தமாக மதுவரித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக உரிய வடிசாலையின் மற்றும் மதுபான உற்பத்திசாலையின் ஆளணியினர்களிடமிருந்தும் ஏனைய மூன்றாந் தரப்பினர்களிடமிருந்தும்	போலி ஆவணங்களைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் அறவிட வேண்டிய வரிப் பணத்தை திட்டமிட்டு செலுத்த தவறுதல் என்பன சம்பந்தமாக துரிதமாக

சமர்ப்பித்த அறிக்கை மற்றும் பிரச்சினைக்குரிய சம்பவம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- எதனோலினை கொள்வனவு செய்வதற்காக மதுவரித் திணைக்களம் வழங்கிய அனுமதிப்பத்திரமாக மதுவரி திணைக்களத்தின் இரண்டு கோவை இலக்கங்களைப் பயன்படுத்தி இரண்டு போலி ஆவணங்களைத் தயாரித்து இரண்டு சந்தர்ப்பங்களின் போது பெல்வத்த சீனிக் கம்பனியின் வடிசாலையிலிருந்து 5,000 லீற்றர் எதனோல் வீதம் 10,000 லீற்றரினை மோசடியாக பெற்றுக்கொள்ளல்

- இவ்வாறு போலி ஆவணங்களைப் பயன்படுத்தி கொள்வனவு செய்த 10,000 லிற்றர் எதனோல் மற்றும் மதுவரி திணைக்களத்தனால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் மூலம் கொள்வனவு செய்த 5,000 லீற்றர் எதனோல் உள்ளடங்கலாக 15,000 லிற்றர் பதுபானங்களை உற்பத்திசாலைக்கு கொண்டு வந்திருக்காமை

- ஒரு லொறியில் மறைத்து ஒரு தனியார் வளவில் இருந்து கைப்பறறப்பட்ட 8,446 போத்தல் மதுபானம் அந்த உற்பத்திச்சாலையில் உற்பத்தி செய்யப்படாத மற்றும் வரிக் கணிப்பிற்கு உள்ளடக்கப்படாத உற்பத்திப் பொருள் என அடையாளம் காணப்பட்டிருந்தமை

- மேற்கூறிய சட்ட விரோதமாக உற்பத்தி செய்துள்ள 8,446 போத்தல் மதுபானங்களில் மதுவரித் திணைக்களம் வழங்கிய சட்டரீதியான பாதுகாப்பு குறியீடுகள் ஒட்டப்பட்டிருந்தமை

வாய்மொழி மூல கூற்றுக்கள் மற்றும் சாட்சிகளை சேகரிக்க வேண்டி தேவைப்பட்டமையும் குற்றவியல் சட்ட விதிமுறைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு காணப்பட்டமையும் காரணமாக அந்த அதிகாரத்தினைக் கொண்டுள்ள சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு பின்வருமாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(அ) இலங்கை மதுவரி திணைக்களத்தின் பிரதி மதுவரி ஆணையாளரின் (சட்டத்தை அமுல்ப்படுத்துல்) 2025 மார்ச் மாத தீகதி இல்லாத ED/05/02Gen ஆம் இலக்க கடிதத்தின் மூலம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு குறித்த விடயம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை

(ஆ) இலங்கை மதுவரி திணைக்களத்தின் மேலதிக மதுவரி ஆணையாளர் நாயகத்தின் 2025 மே 23 ஆந் திகதிய ED/09/01/072025 ஆம் இலக்க CA/WRIT/694/2024 ஆம் இலக்க கதத்தின் மூலம் நீதிமன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்

சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- உற்பத்திச் சாலைக்கு கொண்டு வரப்படாதிருந்த 15,000 லீற்றர் எதனோல் விடயத்திலிருந்து ரூபா 98,667,000 மதுவரி வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் சட்ட விரோதமாக உற்பத்தி செய்த 8,446 மதுபான போத்தல்களிலிருந்து ரூபா 4,171,991 மதுவரி வருமானம் இழக்கப்பட்டிருந்தன.

மேற்கூறிய அவதானிப்புக்கள் சம்பந்தமாக முறையான புலனாய்வினை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டியவர்களை அடையாளங்கண்டு சட்டரீதியாகவும் ஒழுக்காற்று ரீதியாகவும் நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் இழக்கப்பட்ட வரி வருமானங்களை அறவீடு செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

4.4. முகாமைத்துவ பலவீனம்

4.4.1 போலியான பாதுகாப்பு குறியீடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் 2024 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட விசேட புலனாய்வின் போது 16 மதுபான விற்பனை நிலையங்களினால் போலியான பாதுகாப்பு குறியீடுகள் ஒட்டப்பட்டுள்ளன என்ற சந்தேகத்துடன் 54,887 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அவற்றில் 12,170 மதுபான போத்தல்கள் போலியான பாதுகாப்பு குறியீடுகளுடனான மதுபான போத்தல்கள் என அடையாளங்காணப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக மேற்கொண்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடய்ங்கள் அவதானிக்கப்பட்டன.	போலியான பாதுகாப்பு குறியிடுகளுடனான மதுபான போத்தல்கள் சந்தைக்கு வருதல் சம்பந்தமாக உரிய போலியான பாதுகாப்பு குறியீடுகளை அசச்சிடல் மற்றும் உற்பத்தி நிறுவனங்களுக்கு கிடைத்த முறைமை தொடர்பாக முறையான விசாரணைகளை நடாத்தி உரிய போலியான பாதுகாப்பு ஸ்டிக்கர்களை அச்சிட்ட நிறுவனம், அல்லது நபர்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதனைப் போல அரசாங்க வருமானத்தை இழக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் மோசடியாக நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமாக அந்த உற்பத்தி நிறுவனத்திற்கு சட்ட	றையான விசாரணைகளை நடாத்தி துரிதமாக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

• போலியான பாதுகாப்பு குறியீடுகள் ஒட்டப்பட்ட மதுபான பொத்தல்களில்' அடங்கியிருந்த லேபலில் குறிப்பிட்ட உற்பத்திச் சாலையானது மேலே குறிப்பிட்ட மதுபானத்திற்காக உரிய வரியினையும் தண்டப் பணத்தையும் செலுத்தி சம்பவத்தை இணக்கப்பாட்டிற்கு கொண்டு வந்திருந்தும் இந்த போலியான பாதுகாப்பு குறியீட்டினை அச்சிட்ட முறைமை, நிறுவனம் சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் மீண்டும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமைக்கான விசாரணைகளை மேற்கொண்டு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. • இவ்வாறான போலி பாதகாப்பு குறியீடுகளுடனான மதுபான போத்தல்கள் மற்றைய மாகாணங்கக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதா, மீண்டும் இவ்வாறான போலி உற்பத்திகள் இடம்பெறுமா, மற்றும் அது சம்பந்தமாக எடுக்ககூடிய தவிர்த்தல் நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை எடுத்தல் சட்டத்தை அமுல்ப்படுத்தும் பிரிவினால் நிறைவேற்றப்படுவதுடன் எதிர்காலத்தில் உரிய உற்பத்திச்சாலை சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்பொழுது போலியான பாதுகாப்பு ஸ்டிக்கர்களை அச்சிட முடியாதவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைம முறைமைப்படுத்தப்பட்டுள்ளது.	

4.4.2 மத்திய ஆய்வுகூடம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மதுவரித் திணைக்களம் ரூபா 43,571,412 செலவு செய்து நிர்மாணித்த மத்திய ஆய்வுகூடத்தில் பரிசோதனை நடவடிக்கைகளை 2025 சனவரி மாதத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் மனித வளங்கள் தேவைப்பட்டினை சரியாக அடையாளங்கண்டு நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைக்கு இணங்க	தே.பா.சா 01/2024 ஆம் இலக்க செலவுகளை கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையின் பிரகாரம் சேவைக்காக புதிதாக சேர்த்துக்கொள்ளலினை நிறுத்தியதன் அடிப்படையில் இந்த நிலைமை உருவாகியதுடன் மிகவும் விரைவாக புதிய ஆட்சேர்ப்புக்களை	துரிதமாக தகமையுள்ள ஆளணியினரை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பொருத்தமான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு தவறியதன் காரணமாக பரீட்சிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது.	மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	

4.5 புதிய மதுவரி அனுமதிப்பத்திரம் வழங்குதல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
திணைக்களத்தினால் 2024 பெப்ரவரி 06 ஆந் திகதியிலிருந்து 2024 செப்தெம்பர் 24 ஆந் திகதி வரையான காலத்தில் மதுபானங்களை சில்லறைக்கு விற்பனை செய்யும் அனுமதிப்பத்திரம் (ர.பி 04) வழங்குதல் சம்பந்தமாக மேற்கொண்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. • மதுவரி அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்காக அக்கறை காட்டும் தரப்பினர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் விருப்புக்கள் கோரப்படாது உரிய மதுவரி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. • 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவுக்கு இணக்கமற்ற வகையில் 21 வயதுக்கு குறைந்த நபர்களுக்கு மற்றும் 21 வயதுக்கு குறைந்த நபர்கள் கல்வி கற்கும் தனியார் கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. • மதுபானங்களை சில்லறைக்கு விற்பனை செய்யும் மதுவரி அனுமதிப்பத்திரம் (ர.பி.04) வழங்குவதற்கு நிதி அமைச்சரின் அங்கீகாரத்துடனான கடிதத்தில்	மதுவரி திணைக்களத்தின் மூலம் தற்பொழுது இலங்கையில் மதுவரி மதுபான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையானது மதுவரி கட்டளைச் சட்டம் மற்றும் மதுவரி அறிவித்தல் 902 02/2024 மற்றும் 03/2024 என்பவற்றிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதுபான அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் போது பகிரங்க அறிவித்தலின் மூலம் விருப்புக்களை கொருதல் இடம்பெறுவதில்லை. இதற்கான பிரதான காரணமாக உள்ளதானது மதுபான விற்பனை நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒரு இடம் இலங்கை மதுவரித் திணைக்களத்திடம் இல்லாமையும், மதுவரி அதிகாரச் சட்டத்தறிகு இணங்க மதுபான விற்பனை நிலைத்யதை ஸ்தாபிக்க வேண்டிய இடத்திற்காக பொது மக்களின் எதிர்ப்பு, பாடசாலை வழிபாட்டு இடங்களின் தூர எல்லைகள் பிரதான காரணமாக இருப்பதன் காரணமாக கேள்வி நடைமறைகள் பின்பற்ற முடியாது எனினும் மதுவரி அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான வேண்டுதல் கிடைத்ததன்	மதுவரி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது அதற்காக அக்கறை காட்டுகின்ற அனைத்து தரப்பினர்களுக்கும் நியாயமான வாய்ப்புக்கள் கிடைக்கும் நடைமுறையினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உரிய மதுவரி அனுமதிப் பத்திரதினை ஒப்படைத்தல்.ஃ. விற்பனை செயவதற்கு முடியாத வகையில் உரிய வேண்டிக் கொண்டவரின் பெரில் வழங்குமாறு கட்டளையிடப்பட்டிருந்தது.

நிதி அமைச்சிடமிருந்து அவ்வாறு கட்டளை கிடைத்திருந்தும் அக்கட்டளையானது உரிய மதுவரி அனுமதிப் பத்திரத்தில் அல்லது அது தொடர்பான நிபந்தனயில் உள்ளடக்குவதற்கு மதுவரி திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த அறிக்கைத் திகதியளவில் அந்த அனுமதிப்பத்திரங்களுக்கு மத்தியில் 05 அனுமதிப்பத்திரங்கள் ஏனைய தரப்பினர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இன்னும் 02 அனுமதிப்பத்திரங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் அட்டோர்னி அனுமதிப்பத்திரத்தின் மூலம் ஏனைய தரப்பினர்களுககு வழங்கப்பட்டிருந்தது.

- 2024 சனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் (2024 யூன் 26 ஆந் திகதியிலிருந்து 2024 செப்தெம்பர் 21 ஆந் திகதி வரையான காலத்தில்) மதுபானங்களை சில்லறைக்கு விற்பனை செய்யும் மதுவரி அனுமதிப்பத்திரம் (ர.பி 04) வழங்குதல் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவினால் EDR/PE/2024/N-281 ஆம் சம இலக்க 2024 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய மற்றும் 2024 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய கடிதங்களின் மூலம் அனுமதிப்பத்திரங்களை பல்வேறு தரப்பினர்களுக்கு விற்பனை செய்ததன் மூலம் பாரிய அளவிலான நிதி மோசடிகள் மற்றும் பல்வேறு அரசியல் குழுக்களை மேம்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதனால் அதற்காக முறையான

பின்னர் மதுவரி கட்டளை 902, 02/2024 என்பவற்றில் குறிப்பிட்ட கடடணங்களை அறவிட்டு விண்ணப்பபத்திரங்களை வழங்குதல் வழக்கமான நடைமுறையாகும். அதற்கிணங்க மதுவரி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நடைமுறையினை பின்பறறி வெளிப்படைத் தன்மையுடன் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறான முறையான நடைமுறை இன்றி சனாதிபதி தேர்தல் காலப்பகுதியில் மதுபானங்களை சில்லறைக்கு விற்பனை செய்யும் 88 மதுவரி அனுமதிப்பத்திரங்கள் (ர.பி 04) வழங்கப்பட்டிருந்தன.

- சனாதிபதி தேர்தலின் பின்னர் புதிய சனாதிபதி அவர்கள் பதவியேற்றதின் பின்னர் புதிய அரசாங்கத்தின் வேலைத்திட்டம், கொள்கை சம்பந்தமாக கவனம் செலுத்தி அது தொடர்பாக ஏனைய அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்ளாது மதுபானங்களை சில்லறைக்கு விற்பனை செய்யும் 02 மதுவரி அனுமதிப்பத்திரங்கள் (ர.பி 04) வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.